YWCA
CANBERRA

# ஆஸ்திரேலியாவுக்கு ஒரு கருத்த வரலாறு உண்டு



பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவு மக்கள் தமது கலாசாரத்தைக் சொந்தம் கொள்வதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அவர்களுக்குள்ள உரிமைகளை YWCA கன்பரா (CANBERRA) பெருமையுடன் அங்கீகரப்பதுடன், இந்த உரிமைகளுக்கு எமது மரியாதையைச் செலுத்துகிறது.

கௌரவிக்கவேண்டியதன் அவசியத்தையும் மற்றும் பழங்குடியினரின் கலாசாரத்தின் பல்வேறு வகைகளை ஊக்குவித்தலையும் YWCA CANBERRA அங்கீகரிக்கிறது. அத்துடன் உள் நாட்டு உலகக்கண்ணோட்டங்கள், வாழ்க்கைமுறைகள் மற்றும் வழமைச்சட்டங்கள் போன்றவற்றிற்கு மரியாதை செலுத்துகிறது.

நாட்டிலே சமூகங்களின் கலாசாரங்கள், நடைமுறைகள் போன்றவற்றை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பாதுகாத்துவந்த பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை பெண்களுக்கு எமது மரியாதையைச் செலுத்துகிறோம்.

இந்த நிலம் ஒருபொழுதும் கைப்பற்றப்படவில்லை, எப்போதும் அவ்வாறான நிலையில் இருந்ததையும், பழங்குடிமக்கள் நிலமாகத் தொடர்ந்தும் இருக்கும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

# குறுகிய வரலாறு ஒன்று

## பழைமைவாய்ந்த வாழ்ந்துகொண்டிருக்கும் கலாசாரம்

குறைந்தபட்சம் 65,000 ஆண்டுகளாக நீடித்திருக்கும் ஒரு வரலாற்றுடன்கூடிய உலகின் மிகவும் பழமைவாய்ந்த உயிர்பிழைத்திருக்கும் தொடர்ச்சியான கலாசாரத்தைக் கொண்டவர்கள் ஆஸ்திரேலிய பழங்குடியினர் ஆவர். தனிப்பட்ட மொழிகள், பழங்கவழக்கங்கள் மற்றும் நிலத்துடனான ஆன்மீக தொடர்புகளுடன், தனித்துவமான மக்களை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள்.



## குடியேற்றம்

- 1788-இல் ஐரோப்பிய குடியேற்றவாசிகள் முதலில் வந்துசேர்ந்தபோது, குடியேற்றம் ஆரம்பமானது. உடைமைபறிக்கப்பட்டமை, வன்முறை மற்றும் நோய் போன்றவற்றைச் சகித்துக்கொண்ட பழங்குடி ஆஸ்திரேலியர்களுக்கு இது பேரழிவையேற்படுத்தியது.
- சளிக்காய்ச்சல் மற்றும் சின்னம்மை போன்ற இறக்குமதி செய்யப்பட்ட நோய்கள், பழங்குடியினரிடையில் குறிப்பிடத்தக்க சனத்தொகை அழிவில் முடிவடைந்தது.
- ஐரோப்பிய சட்டமூலமும், பழக்கவழக்கங்களும் திணிக்கப்பட்டன, மற்றும் உள்ளூர் வழக்கங்கள் தடைசெய்யப்பட்டன.
- வீடுகள் அல்லது நிறுவனங்களில் தடுத்துவைக்கப்படுவதற்காக, பழங்குடி மக்களின் குடும்பங்களிலிருந்து பலவந்தமாகச் சிறுவர்களை அப்புறப்படுத்துவதை உள்ளடக்கிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1900 க்கும் 1970 க்கும் இடையில் நிகழ்ந்தது. இது 'Stolen Generation' (திருடப்பட்ட தலைமுறை) என அழைக்கப்படுகிறது.
- அப்புறப்படுத்தப்பட்ட சிறுவர்கள் நிறுவனங்களில் அமர்த்தப்பட்டார்கள் அல்லது பழங்குடியல்லாத குடும்பங்களுடன் விடப்பட்டார்கள். கலாசாரத் தொடர்புகளிலிருந்து சிறுவர்களை நீக்குவது இதன் அர்த்தமாகக்கொள்ளப்பட்டது அத்துடன் இது நீண்டகால உணர்வதிர்வை ஏற்படுத்தியது.



## நீண்டகால பாதிப்பு (LONG TERM IMPACT)

- வலிந்து அப்புறப்படுத்தும் கொள்கை இறுதியாக நீக்கப்பட்டாலும், வீட்டுக்கு அப்பால் பராமரிக்கப்படும் சிறுவர் எண்ணிக்கையில், பழங்குடியைச் சேர்ந்த சிறுவர்கள் விகிதாசாரமற்ற முறையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறார்கள்.

- அமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகள் நீண்டகால தீமைகளை விளைவித்துள்ளன. பழங்குடி மக்களுக்கு, சமூகம்சார்ந்த, நிதிசார்ந்த தீமைகள், உடல் நலக்குறைவு, மற்றும் குறைந்த ஆயுட்காலம் போன்றவற்றில் சிலவற்றை இது உள்ளடக்கும்.

- இந்தப் பிரச்சினைகள் இருந்தபோதும், பழங்குடி ஆஸ்திரேலியர்கள் நம்பமுடியாதளவு மீண்டும் உறுதிபெற்று, சுயமாகவே செய்யமுடியுமென வெளிப்படுத்தியுள்ளார்கள். அச்சுறுத்தப்பட்ட பழங்குடிமக்களின் மொழிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



மீண்டும் உடல்நலம்பெறுவதை நோக்கிய பயணம் - (ஆக்கம்)லிண்டா ஹடில்ஸ்ரன் மற்றும் YWCA கான்பரா மூத்தோர் குழு

# WHITE AUSTRALIA POLICY (வெள்ளை ஆஸ்திரேலிய கொள்கை)

பழங்குடி மற்றும் ரொறேஸ் தீவகத்தோரை மேலும் ஒடுக்கும் "வெள்ளை ஆஸ்திரேலிய கொள்கையை" (“White Australia Policy”) ஆஸ்திரேலியா கொண்டிருந்தது. மேலும் இது புதிய புலம்பெயர்வோரின் வருகையைக் கட்டுப்படுத்தியது. இது 1970-இல் இல்லாதொழிக்கப்பட்டது ஆனால், அதன் மரபு மற்றும் தாக்கம் இன்றும் இருக்கிறது.

கலாசார மீட்சி, இணக்கம் மற்றும் காலங்காலமாக இருந்துவந்த பாகுபாடு போன்றவற்றில் தற்போதய யோசனைகள் கருத்தொருமித்துள்ளன.

பழங்குடியினர் மற்றும் பழங்குடியல்லாத ஆஸ்திரேலியர்களுக்கிடையில் இருக்கும் இடைவெளியை இணைப்பதில் இந்த எண்ணங்கள் கருத்தைச் செலுத்துகின்றன. அதிகமானோரை உள்ளடக்கிய, ஒரு நியாயமான சமூகத்தை உருவாக்குவதற்கு, வரலாற்றையும் கடந்தகால கொள்கைகளின் தாக்கத்தையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

### நீங்கள் அறிந்துள்ளீர்களா?

"பழங்குடி ஆஸ்திரேலியர்கள்" (“Indigenous Australian”) எனும் சொற்பதம் பழங்குடியினரையும், ரொறெஸ் நீரிணைத் தீவு மக்களையும் உள்ளடக்கும்.

*-AIATSIS*



# நட்புறவு என்றால் என்ன?

அனைத்து ஆஸ்திரேலியர்களின் நலனுக்காக, பழங்குடியினர், ரொறெஸ் நீரிணை தீவு மக்கள் மற்றும் இந்த மண்ணின் புராதன மக்கள் ஆகியோருக்கிடையில் இருக்கும் தொடர்பை உறுதிப்படுத்துவதை நட்புறவு இலக்காகக்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய சமூகம் பழங்குடியினரின் கலாசாரத்தை ஏற்றுக்கொள்வதையும் மதிப்பதையும் அத்துடன் அவர்களின் வேலையிடங்கள் அல்லது சமூக அமைப்புகளில் அதன் அங்கீகாரத்தையும் மற்றும் மேம்பாட்டையும் ஒன்றிணைத்துக்கொள்வதற்குப் பங்களித்தல்கள் மற்றும் உற்சாகமான நடவடிக்கைகள் எடுப்பதை நட்புறவு வேண்டுகிறது.

நட்புறவானது, மிகவும்கூடிய சமத்துவ மற்றும் மரியாதையான எதிர்காலத்தை நோக்கி ஒன்றாகப் பயணிப்பது பற்றியதாகும்.

அவ்வாறு செய்வதன்மூலம், வரலாறுகள், கலாசாரங்கள் மற்றும் பழங்குடியினர் மற்றும் ரொறேஸ் நீரிணை தீவினரின் எதிர்காலங்களை மதிக்கும் உறவுகள் மற்றும் சமூகங்களை நாம் கட்டியெழுப்பலாம்.




# கன்பராவின் பாரம்பரிய உரிமையாளர்கள்

கன்பரா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களை உள்ளடக்கிய இடங்களின் பாரம்பரிய சொந்தக்காரர்கள் நுண்னாவல் (Ngunnawal) மக்கள் ஆவார்கள்.

நுண்னாவல் மக்களைக்கொண்ட இடமானது, பனிபடர்ந்த மலைகளின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது மலைகளிலிருந்து கரையோரங்களுக்கு உறுதியான இணைப்புகளையும், நடைபாதைகளையும் வழங்குகிறது. இந்த நீரோடும் கால்வாய்கள், மற்றும் சிறிய பாதைகளை பாடல் வரிகள் மற்றும் கனவுகளை (Songlines and Dreamings) நினைவூட்டுவதுடன் எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன.

இயற்கைப்பாதுகாப்புகள், நீர் போன்றவற்றில் நுண்னாவல் மக்கள் ஆழமான கலாசார ஆர்வத்தைக் கொண்டுள்ளார்கள் அத்துடன் கதைசொல்வதன்மூலமும் அத்துடன் கலைசார்ந்த வெளிப்பாடுகள் ஊடாகவும் அவர்களுக்கு இருக்கும் மண்ணுடனான இணைப்புகளை பராமரிக்கிறார்கள்.

# இடம்பெற்றுக்கொண்டிருக்கும் குடியேற்றத்தின் பாதிப்பு

ஆஸ்திரேலிய குடியேற்றம் நீடித்து நிலைக்கக்கூடிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பின்வருவனவற்றினூடாக இதனைக் காணலாம்:

- சுகாதார பாதிப்புகள் - பழங்குடி ஆஸ்திரேலியர்கள், தீராத வியாதிகளைக் கொண்டிருக்கும் பாரிய நிகழ்வுகள், இது கடந்தகால உணர்வதிர்ச்சி மற்றும் சுகாதார பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதில் இருக்கும் மட்டுப்பாட்டுடன் தொடர்புபட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

- குறுகிய ஆயுட்காலம் - பழங்குடியினர் அல்லாத ஆஸ்திரேலியர்களைக் காட்டிலும் மிகவும் குறைவான ஆயுட்காலத்தை ஆஸ்திரேலிய பழங்குடியினர் கொண்டுள்ளனர்.

- குறைவான கல்விப்பயன்கள் - வரலாற்றுப் பாகுபாடு மற்றும் பழங்குடியினரின் பாடசாலைகளுக்கிடையில் போதாத நிதியுதவி போன்றன குறைந்த கல்வி முன்னேற்றத்தை விளைவித்துள்ளன. ஆதரவுவழங்குதல் மற்றும் வழங்கள் தொடர்பாகவும் தொடர்ச்சியான பிரச்சினைகள் இருக்கின்றன.

- தொழில் பிரச்சினைகள் - பாரிய வேலையில்லா விகிதங்களை பழங்குடி ஆஸ்திரேலியர்கள் அனுபவிக்கிறார்கள். ஓரம்கட்டுதல், இனத்துவேஷம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புகள், அதேபோல வேலையிட பாரபட்சம் போன்ற காரணங்களினால் இது இடம்பெறுகிறது.

- உணர்வதிர்ச்சியின் பிரசன்னங்கள் - திருடப்பட்ட தலைமுறையினரிலும் பார்க்க மிகவும் குறிப்பிடத்தக்க பழங்குடி மக்களைப் பாதிக்கும் தலைமுறைகளுக்கிடையிலான உணர்வதிர்ச்சி இருக்கிறது. சமுதாயங்கங்களுக்குள் இருக்கும் உளநோய் மற்றும் சமூக நடவடிக்கைகள் ஊடாக இதனை அவதானிக்கலாம்.



## நாட்டுக்கு நல்வரவு எதிர் நாட்டின் அங்கீகாரம்? (WELCOME TO COUNTRY VS ACKNOWLEDGEMENT OF COUNTRY?)

பழங்குடியினர் அல்லது ரொறெஸ் நீரிணைத் தீவக முதியோர் தமது நாட்டுக்கு வருகை தருபவர்களை வரவேற்பதற்கு அவர்களால் நாட்டுக்கு நல்வரவு எனும் வைபவம் நடத்தப்படுகிறது. இது நடனம், புகைத்தல் வைபவம் அல்லது பேச்சு போன்றவற்றை உள்ளடக்கலாம். இந்த நிகழ்வு நடத்தப்படும் இடத்திலுள்ள மக்களின் பாரம்பரிய வழக்கத்தின்மூலம் மாத்திரம் நாட்டுக்கு நல்வரவு வழங்கப்பட இயலும்.

மண்ணுடன் பாரம்பரிய உரிமைகொண்டவர்களுக்கும், மண்ணுடன் பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவகத்தார் போன்றோருக்குள்ள தொடர்ச்சியான தொடர்பு போன்றவற்றிற்கும் தனது மரியாதையை வெளிக்காட்டுவதற்கு எந்தவொரு தனிப்பட்டவரையும் நாட்டின் ஏற்பு அனுமதிக்கிறது. பழங்குடியைச் சாராத ஒருவரால் அல்லது மண்ணுடன் மூதாதையர் உறவு இல்லாத பழங்குடியைச் சார்ந்த ஒருவரால் வைபவம் ஒன்றின் ஆரம்பத்தில் இது பொதுவாக வழங்கப்படுகிறது.



# முக்கிய தேதிகளும் வைபவங்களும்

- **தேசிய மன்னிப்பு தினத்தின் ஆண்டுவிழா (பெப்ரவரி 13):**
  திருடப்பட்ட தலைமுறைகள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பழங்குடியினர் அத்துடன் ரொறெஸ் நீரிணை தீவக சமூகங்களால் அனுபவிக்கப்பட்ட தொடர்ந்தும் இருந்துவரும் பாதிப்புகள் மற்றும் தலைமுறையினருக்கிடையிலான உணர்வதிர்ச்சி போன்றவற்றைப் பிரதிபலிப்பதற்கான காலம் தேசிய மன்னிப்பு தினம் ஆகும்.

- **தேசிய இடைவெளி நிரப்பு தினம் (மார்ச்சு 16) (National Close the Gap Day (March 16)):**
  தமது ஆரோக்கியத்தையும், நல்வாழ்வையும் மேம்படுத்தும், ஆஸ்திரேலியா முழுவதும் இருக்கும் சேவைகளை அறிந்துகொள்ளவும், பயன்படுத்தவும் பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவகமக்களை ஊக்குவிப்பதற்காக தேசிய இடைவெளி நிரப்பு தினம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 2006 இலிருந்து வருடாவருடம் National Close the Gap Day கொண்டாடப்பட்டுவருகிறது அத்துடன் 2030 வரையில் பழங்குடிமக்களின் ஆரோக்கிய சமத்துவத்தை அடைந்துகொள்வது குறித்து வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

- **தேசிய மன்னிப்பு தினம் (மே 26):**
  முதல் மன்னிப்பு தினம் சிட்னியில் 26 மே 1998-இல் நடத்தப்பட்டது திருடப்பட்ட தலைமுறைகள் என அறியப்படும் தமது குடும்பங்கள் மற்றும் சமூகங்களிலிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவக மக்களின் இரக்கமற்ற நடாத்துதலை நினைவூட்டும் முறையில் இது அமைந்துள்ளது. எமது மக்களையும், நாட்டையும் சுகப்படுத்த நாம் எவ்வாறு பங்களிக்க முடியுமென்பதனைப் பிரிதிபலித்து இந்த நாளை நாடு முழுவதும் இருக்கும் ஆஸ்திரேலிய மக்கள் அனுஷ்டிக்கிறார்கள்.

- **1967 பொதுஜனவாக்கெடுப்பின் ஆண்டுவிழா (மே 27):**
  மே 27-இல் நாங்கள் 1967 பொதுஜனவாக்கெடுப்பின் ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறோம். இதன் விளைவாக ஆஸ்திரேலிய அரசியலமைப்பு பூர்வீக பழங்குடி ஆஸ்திரேலியர்களை ஆஸ்திரேலிய அரசியலமைப்பு எவ்வாறு குறிப்பிடுகிறது என்பதை மாற்றியது, தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பில் பழங்குடி ஆஸ்திரேலியர்களைக் கணக்கில் எடுக்கப்படுவதை அர்த்தப்படுத்தியது, அத்துடன் பழங்குடி மக்களின் நன்மைக்காக சட்டங்களை இயற்றுவதற்கு பொது அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கியது.



- **நட்புறவு வாரம் (27 மே - 3 ஜூன்):**
  எமது பகிரப்பட்ட வரலாறுகள், கலாசாரங்கள் மற்றும் நாம் பெற்றுக்கொண்டவைகள் பற்றி அறிந்துகொள்வதற்கும் அத்துடன் ஆஸ்திரேலியாவில் நட்புறவை அடைவதற்கு எவ்வாறு நாம் அனைவரும் பங்களிக்கலாமென ஆராய்வதற்கும் தேசிய நட்புறவு வாரம் (NRW) அனைத்து ஆஸ்திரேலியர்களுக்குமான ஒரு நேரமாகும்.

- **NAIDOC வாரம் (ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் வாரம் [ஞாயிறு முதல் ஞாயிறு வரைக்கும்]):**
  NAIDOC என்பது, தேசிய பழங்குடியினர் மற்றும் தீவகத்தோர் அனுஷ்டிப்பு தின நிர்வாகக்குழு' (‘National Aborigines and Islanders Day Observance Committee’) என முதன்முதலாக அறியப்பட்டது பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவக மக்களின் வரலாறு, கலாசாரம் மற்றும் பெற்றுக்கொண்டவைகளைக் கொண்டாடுவதற்கு ஒவ்வொரு ஜூலை மாதத்திலும் ஆஸ்திரேலியா முழுவதும் NAIDOC வார கொண்டாட்டங்கள் நடாத்தப்படுகின்றன. பழங்குடிமக்கள் சமூகங்களில் மாத்திரமன்றி வாழ்க்கையின் அனைத்துத் தரப்பிலிருந்துவரும் ஆஸ்திரேலியர்களாலும் NAIDOC கொண்டாடப்படுகிறது. பல்வேறுபட்ட செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கும், உள்ளூர் பழங்குடி மற்றும் ரொறெஸ் நீரிணை தீவகமக்கள் சமூகத்திற்கு ஆதரவளிப்பதற்கும் இந்த வாரம் ஒரு சிறந்த வாய்ப்பாகும்.



# கனவுநேரம் (‘THE DREAMTIME’) என்பதன் அர்த்தம் என்ன?

பூர்வீகமக்களின் ஆன்மீக நம்பிக்கைகள், கதைசொல்லல் மற்றும் இருப்பு பற்றிய முக்கிய அம்சங்களைப் பதிவுசெய்யும் வரலாற்று நம்பிக்கை முறைமையை இந்த கனவுகாணுதல் எனவும் அறியப்படும் கனவு நேரம் குறிப்பிடுகிறது.

கனவுநேரம் என்பது பூர்வீக மக்களின் மதம் மற்றும் கலாசாரம் போன்றவற்றின் அடிப்படையாகும். இது கிட்டத்தட்ட 65,000 ஆண்டுகள் பழமையானதாகும். இது, ங்காரங்க்கர்னி மற்றும் ஜ்டுகுல ஜுகுர்பா (Ngarranggarni and Tjukula Jukurrpa) என்பன உட்பட பழங்குடி மக்களின் மொழிகளில் பல்வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறது. என்ன நடந்தது, எவ்வாறு உலகம் உருவாக்கப்பட்டது, எவ்வாறு மனித இனம் தோற்றுவிக்கப்பட்டது மற்றும் எவ்வாறு எமக்குத்தெரிந்த உலகத்தில் பழகிக்கொள்வதற்கு மனிதர்களுக்காகப் படைத்தவன் எவ்வாறு விரும்பினான் என்பதையும் இது சொல்கிறது.

கனவு நேரத் (Dreamtime)தின்போது ஆன்மீக முன்னோர்கள் இயற்கை உலகத்தை கட்டியெழுப்பினார்கள்; இது மிருகங்கள், மரங்கள், தாவரங்கள், மலைகள், பாறைகள், நீறூற்றுகள் மற்றும் ஆறுகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது. இந்த ஆன்மீக மனநிலைகள் மண், மக்கள் போன்ற இரண்டையும் உருவாக்கியது.

இந்த கனவு நேரம் என்பது பழங்குடிமக்கள் கூறுவதன் பிரகாரம் தொடர்ந்து இடம்பெறும் ஒரு செயற்பாடாகும். கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை இணைக்கும் முடிவற்ற ஒரு சங்கிலியில் இந்தக் கனவு நேரம் உண்மையாக இருந்ததாக அவர்கள் நம்பினார்கள்.



# 'தினம் மாற்றம்' ('CHANGE THE DATE') என்பதால் என்ன புரிகிறது? (WHAT IS MEANT BY 'CHANGE THE DATE'?)

ஆஸ்திரேலிய தினமாக ஜனவரி 26 ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டுள்ளது ஏனென்றால் இது முதல் ஐரோப்பிய குடியேற்றவாசிகள் வந்துசேர்ந்ததையும் மற்றும் குடியேற்றத்திட்டம் உருவானதையும் குறிப்பிடுகிறது.

ஆயினும், பல பழங்குடி மக்கள் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவுகளைச் சார்ந்தோருக்கு உடமை பறிக்கப்பட்ட மற்றும் இடம்பெயரவைத்த ஆரம்ப நாளை இந்தத் தேதி குறிப்பதுடன் ஒரு கொண்டாட்டத்திற்குரிய நாளல்ல.

ஆஸ்திரேலிய தினத்தின் தேதியை மாற்றுவது, ஒன்றுகூடி, மகிழவும் மற்றும் நட்புறவை நோக்கி மேலும் நகருவதற்கும் சகல ஆஸ்திரேலியர்களுக்கும் ஒரு வாய்ப்பினை வழங்கும்.



# மேலும் தகவல் அறியக்கூடிய இடங்கள்
# (REFERENCES AND WHERE TO LEARN MORE)

**பழங்குடி ஆஸ்திரேலியர்கள்: பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவுகளைச் சேர்ந்த மக்கள் | AIATSIS:**
https://aiatsis.gov.au/explore/indigenous-australians-aboriginal-and-torres-strait-islander-people

**பழங்குடியினர் மற்றும் ரொறெஸ் நீரிணை தீவு மக்களின் கலாசாரம் மற்றும் வரலாறு - VPSC**
https://vpsc.vic.gov.au/workforce-programs/aboriginal-cultural-capability-toolkit/aboriginal-culture-and-history/

**நல்லிணக்கம் என்றால் என்ன? - நல்லிணக்கம் ஆஸ்திரேலியா:**
www.reconciliation.org.au/reconciliation/what-is-reconciliation/

**நல்லிணக்கம் | அவர்களை வீட்டுக்குக் கொண்டுவருதல் (humanrights.gov.au):**
https://bth.humanrights.gov.au/healing/reconciliation

**தேசிய நல்லிணக்க வாரம் - நல்லிணக்கம் ஆஸ்திரேலியா: Australia:**
www.reconciliation.org.au/our-work/national-reconciliation-week/

**காலவரையறை: ஆஸ்திரேலியாவின் பழங்குடிமக்கள் - ABC News:**
www.abc.net.au/news/2015-07-06/indigenous-recognition-timeline-of-australian-history/6586176

**கனவுநேரம் மற்றும் கனவுகாணுதல் என்றால் என்ன? - பழங்குடியின சமகாலத்தவர்:**
www.aboriginalcontemporary.com.au/pages/what-is-the-dreamtime-and-dreaming

**பழங்குடியின கனவுநேரம் என்றால் என்ன? (aboriginal-art-australia.com):**
www.aboriginal-art-australia.com/aboriginal-art-library/aboriginal-dreamtime/

**பழங்குடியினர் வரலாறு மற்றும் ரொறெஸ் நீரிணை தீவக மக்களின் பேச்சு உரிமைக்காக வாதாடுபவர்கள் | ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு:**
https://humanrights.gov.au/our-work/aboriginal-and-torres-strait-islander-social-justice/history-aboriginal-and-torres-strait

**தேசிய இடைவெளியை மூடும் நாள் (National Close The Gap Day) - 16 மார்ச்சு 2023wincalendar.com) தேசிய மன்னிப்பு தினம் - கடந்தகாலத்தை நினைவூட்டல் மற்றும் எமது எதிர்காலத்திற்கான அழைப்பு | Life Without Barriers:**
www.wincalendar.com/au/Close-Gap-Day

**தேசிய மன்னிப்பு தினம் - கடந்தகால நினைவூட்டி மற்றும் எதிர்காலத்திற்கான அழைப்பு | Life Without Barriers:**
www.lwb.org.au/news/national-apology-day-a-reminder-of-the-past-and-a-call-to-our-future/

**நாம் பேசுவோம் ... மன்னிப்பு தினம் - நட்புறவு ஆஸ்திரேலியா:**
www.reconciliation.org.au/publication/lets-talk-sorry-day/

**NAIDOC வாரம் என்பது என்ன மற்றும் ஏன் இது முக்கியமானது? -**
www.ashburton.net.au/story/what-is-naidoc-week-and-why-is-it-important/

**1967 பொதுஜனவாக்கெடுப்பு: பழங்குடி மக்களுக்கான ஒரு மிகப்பெரிய மாற்றமாகும் | Indigenous.gov.au:**
www.indigenous.gov.au/news-and-media/stories/1967-referendum-profound-change-indigenous-peoples

# ஆஸ்திரேலியாவுக்கு ஒரு கறுத்த வரலாறு உண்டு



**YWCA CANBERRA**

Level 2, 71 Northbourne Ave, Canberra ACT 2601
தொலைபேசி 02 6185 2000
மின்னஞ்சல் canberra@ywca-canberra.org.au
www.ywca-canberra.org.au
@ywcacanberra